



3 ஆய்வுக்கோவை 2007

# ஆய்வுக் கோவை

## 2007

பதிப்பாசிரியர்

இரா. மோகன்

மு. மணிவேல்

கி. நாச்சிமுத்து

தா. சேதுபாண்டியன்

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.

மேலும், கட்டுச்சோற்றைத் தோளில் சுமந்து கொண்டுபோய்க் கிணறு வெட்டும் தொழிலாளி மிக்க தீப்பொறி பறக்கப் பாறைகளை வெட்டித் தோண்டி கிணறு அமைப்பதையும் (அகம் - 79; 3-4), அழகிய நிறம் பொருந்திய முத்துவடம் புனைந்து அழகு செய்யப்பட்ட சுவரில் பாவை அமைந்திருப்பதையும் (அகம் - 369; 8-9), மகளிர் நாட்களை எண்ணி எண்ணி கணக்கிட்டு நீண்ட சுவரில் கோடிட்டிருப்பதையும் (அகம் -61; 4-5, 289; 9-10) அறியமுடிகின்றன.

வீட்டின் திண்ணையில் குட்டிகளை ஈன்ற நாய் தங்கியிருக்கும் (அகம் - 167; 17) என்று கூறுவதனால் நாய் வளர்க்கப்பட்ட செய்தியினையும், உயர்ந்த மலையில் தடையற்றுச் செல்ல பாறையை அறுத்து வழிசெய்தனர் (அகம் - 69; 10-12), 281; 8-12) என்பதையும் உணரமுடிகின்றன,

இம்மையிலே நன்மை செய்வதனால் தீமையில்லை நன்மைதான் கிடைக்கும் என்னும் பழமொழியை,

"இம்மை நன்று செய் மருங்கில்தீது இல்" (அகம்.101; 2)

என்ற அடியில் காணலாம்.

## முடிவுரை

அகநானூற்று ஐந்திணைகளுள் பாலைத்திணைப் பாடல்களில் திருவிழாவும் தெய்வவழிபாடும், நடுகற்களைப் பொருத்தி வணங்குதலும், உணவு சமைத்து வந்தவர்களுக்கு வழங்கியதும், சகுனம் பார்த்தலும், மகளிர் விளையாட்டும், தொழிலாளி கிணறு தோண்டியதும், சுவரில் பாவை அமைத்து, நாட்களைக் கணக்கிட்டு கோடிட்டதும், இப்பிறவியில் செய்த நன்மை எப்போதும் இன்பம் தரும் போன்ற செய்திகள் அக்கால மக்களின் பண்புகளை உணர்த்துவதாக அமைந்துள்ளன.

# பதினெண்கீழ்க்கணக்கில் வாழ்வியல் தொன்மங்கள்

இரா. விஜயன்,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
கோவை— 641 029.

◆

## முன்னுரை

இயன்ற வரை வாழாமல் வாழ்வதையே இயலாக அமைத்து வாழ்ந்து காட்டியவர்கள் நம் தமிழர். அதனால்தான் அவர்தம் வாழ்வு வாழ்வியலாக நம் வாழ்க்கைப் பயணத்தை வழிநடத்துகிறது.

மொழிக்கு மட்டுமின்றி வாழும் வாழ்க்கைக்கும் இலக்கணம் படைத்து ஒவ்வொருவர் வாழ்வும் பொருள் நிறைந்ததாக அமைய பொருளியல் படைத்த தொல்காப்பியர் வழி, சங்கத் தமிழர்தம் வாழ்வானது இன்றும் தொடர்ந்து வரும் தொன்மம் நிறைந்ததாய் பல வாழ்வியல் சிந்தனைகளை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன.

ஒவ்வொரு சமூக மக்களின் வாழ்வும் அவர்களது மொழிகளை மட்டுமின்றி, தொன்மங்களையும் மெய்மைகளாய் கொண்டுள்ளன. வாழ்வியல் தொன்மங்களைக் கொண்டே ஓர் சமூகத்தை இஃதென எளிதில் இனம் கண்டறிய முடியும். இதன்வழி சங்கத் தமிழர் தம் தொன்மங்களுக்கும் பின் வந்த தமிழர்தம் தொன்மங்களுக்கும் இணைந்த பாலமாய் விளங்கும் பாதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் வெளிப்படும் வாழ்வியல் சார்ந்த தொன்மைகளை ஆய்வதே இக்கட்டுரை.

## கதைத் தொன்மம்

இதன் வினை இஃதென கதைகளின் மூலம் தொன்மம் கண்டு அதைத் தமது வாழ்வியலோடு விதைத்துக் கொண்டனர் அன்றைய மக்கள். அக்கதைத் தொன்மம் மரமாய் இன்றும் நமக்கு நிழல் தருவது அத்தொன்மங்களே எனில் அது மிகையல்ல....

திருமால் மூன்றடியில் உலகளந்து, மாவலியின் செருக்கடக்கிய கதையை,

"............ அடியினால்
முக்கால் கடந்தான் முழு நிலம்" (நான்மணி: 2)
"கண்ணகல் பிராளம் அளந்ததூவும்" (திரிகடுகம்)
"ஆஅம் எனக்கு எளிது என்று ..."
"மிக்கு நீர் பெய்கிழர் தான்" (பழமொழி: 183)
"ஊர்ந்து உலகம் தாவின" ......

இக்கதையைத் தொன்மமாய் விழாவாகத் தமது வாழ்வியலோடு மக்கள் இன்றும் வழங்கி வருவது நினைக்கத்தக்கது.

நீதியானது எவ்வாறு இருக்க வேண்டும் அது எவ்வழியில் செல்லும் என்பதை, மனுநீதித் தோழன் தன் மகனைத் தேர்காலில் ஊர்ந்த கதையை,

கறவைக் கன்று ஊர்ந்துதானைத்
தந்தையும் ஊர்ந்தான்... (பழமொழி: 242)

எனவும், கரிகாற்சோழன் நீதி வழங்கியதை.

உரைமுடிவு காணான்...... படும்

என்றும், பொற்கைபாண்டியன் கதையை,

...... தவற்றை
நினைத்து தன் கைகுறைத்தான்...... (பழமொழி: 76)

எனத் தொன்மங்களாய் எண்ணி வாழ்ந்தது இவர் தம் தனிச்சிறப்பு. ஈகை தமிழர் தம் நெறி, உலகிற்கு தமிழர் தம் முகவரியாய்த் தந்தது. ஈகை ஈகையையும் கதையின் வடிவில் தொன்மங்களாய் மாற்றித் த வாழ்வோடு நிலைநிறுத்திக் கொண்டனர் தமிழர். பாரி முல்லைக்குத் தேர் தேர்ந்த கதையையும்,

"முல்லைக்குத் தேரும்...... (பழமொழி: 74)
பேகன் மயிலுக்குப் போர்வை வழங்கிய கதையையும் அறியலாம்
...... "மயிலுக்குப் போர்வையும்" (பழமொழி: 74)

## அறிவியல் தொன்மம்

ஆறாவது அறிவு வெளிப்பாட்டில் விளைவது அறிவியல் வாழ்வியலோடு அறிவியலைப் பொருத்தித் தமிழர் வாழ்ந்த முறை உ



அறிவியலின் முன்னுரை நாவல் மரத்தடியில் உறங்கக்கூடாது. அது நச்சுக் காற்றை வெளியிடும் என்பதை அன்றே,

..."இராமரமும் சேரார்...." !

என்று தொன்மமாய்ச் சுட்டியதை இன்றும் நாம் பின்பற்றுவது உண்மை. பெரிய மரத்தின் அடியில் சிறிய மரத்தை வைக்கக் கூடாது. ஏனெனில் அதற்குத் தகுந்த சூரிய ஒளி கிடைக்காது என்பதை. ........"மரத்தின் கீழ் ஆகாமரம்"..........! (ஆசா:17) என்னும் கூற்றின் வழி அறிய முடிகின்றது.

உணவு உண்பதற்கு முன் சிறிதளவு தண்ணீர் குடிக்க வேண்டும். அப்போது நெகிழ்ச்சி ஏற்பட்டு உணவு வயிற்றைச் சீராகச் சென்றடையும் என்பதை ஆசாரக் கோவையில் தொன்மமாய், "முக்கால் குடித்துத் துடைத்து..." (ஆசா: 27) என வெளிப்படுவது மருத்துவ அறிவியல் தொன்மம் ஆகும். மேலும், உவர் மண் உள்கொதிப்புடையது. சுவர் அமைத்தால் உதிர்ந்துவிடும் என்பதை பழமொழி நூல் தொன்மமாய் காட்டுகிறது.

"சுவர் நிலம் செய்தமையைக் கட்டியக் கண்ணும்
உவர் நிலம் உட்கொதிக்குமாறு ....! " (பழமொழி: 284)

## நம்பிக்கைத் தொன்மம்

மக்கள் தம் வாழ்வோடு இரண்டறக் கலந்தது அவர் தம் நம்பிக்கை அன்று முதல் இன்று வரை சில நம்பிக்கைகள் தொன்மங்கள் நம்மைத் தொடர்ந்து வருவது எண்ணத்தக்கது. பறவையைக் கூட்டில் அடைப்பவர்கள் நரகத்தை அடைவார்கள், மறுபிறப்பில் காலில் விலங்கிடப்படுவார்கள் என்னும் நம்பிக்கையை, இன்னிலை வழி,

"கோலப் புறவன் குரல் கூவிப் புள்சிமிழ்த்தோன்
காலில் தளைபரப்பச் சீர் ஒலிக்கும்". (இன்னிலை: 3)
என்றவாறு பொய்கையார் சுட்டுவது ஏற்கத்தக்கது.

மழை பெய்வதையும் பெய்யாமையையும் கொண்டு அந்நிய மக்களின் இயல்பை அறியலாம் என்பதை ............ "நிலத்தியல்பு வானம் உரைத்து விடும்" (நான்மணி: 71) என்பதிலிருந்து காணலாம்.

ஒரு வட்டம் கீறி அதனுள் பல கழித்து அவற்றை இரட்டையாக எண்ணில் ஒன்று மிஞ்சினால், தலைவன் விரைவில் வந்து கூடான்; பின்னும் மிஞ்சாது இரட்டையாக அமைந்தால் தலைவன் விரைவில்

வந்து கூடுவான் என்றும் நம்புதல், அன்றைய நம்பிக்கை. இன்றும் சில காரியங்கள் கை கூடுமா? என்தற்குப் பெண்கள் இம்முறையைக் கையாள்வது நினைக்கத்தக்கது.

"தாழ்கடல் தண் சேர்ப்பன் தார் ....
ஆழியால் காணுமோயாம்" (ஐந்திணை ஐம்பது: 43)

காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் எனும் நம்பிக்கை நம்மில் இல்லாதவர் இலர். இத்தொன்மம் அன்றே பழமொழி.

"கள்ளி அகிலும் கருவாக்கைச்
சொல்லும் போல்" (பழமொழி: 35)

வழியாக வெளிப்பட்டு காக்கை கரைவது நோக்கத்தக்கது. புண்ணிய பொருள் நமது கைகளில் கரைத்தால் உடனே நாம் அதை தலையால் வணங்கிக் கண்ணில் ஒற்றிக் கொள்கிறோம். இத்தொன்மம் அன்றே ஆசாரக் கோவையில்,

"புண்ணிய மாய தலையோடு உறுப்பு உறுத்து"...... (ஆசா: 41)

என்று காட்டி நமக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. பெண்களுக்கு இடக்கண் துடித்தல் நல்நிமித்தம்எனும் தொன்மம் அன்று பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"பூங்கண் இடம் ஆகும்".. (ஐந்திணை: 39)
"இறந்துகண் ஓடும் இடம்"... (திணை: 80)

என்று பல்லி சொல்லிற்குப் பலன் உண்டு என்று தமிழர் தம் நம்பிக்கைத் தொன்மங்களில் மூத்தது.

"...... கவிணிப் பிணிதிரப்
பாங்கத்துப் பல்லி படும்".. (ஐந்திணை எழுபது: 39)
"...... வெஞ்சுரம் சென்றார் வரக்கண்டு
வாய்மான்ட பல்லி படும்". (கைந்நிலை: 18)

என்று பல்லி சொல் நம்பிக்கைத் தொன்மம் இன்றும் நம் வாழ்வில் ஓசையை எழுப்பிக் கொண்டு இருப்பது கண்கூடு.

## பழக்கவழக்கத் தொன்மம்

பழக்கம் என்பது நாம் பழகிக் கொள்வது. வழக்கம் என்பது நம் முன்னோர் பழகியது. பிறகு. அது நமக்கு வழக்கமாகும். நம் பழக்கம் நம் பின்னோர்க்கு வழக்கமாகும். வாழும் நெறியையும், நெறியில் வாழ்வதையும் முதன்மையாய்க் கொண்டு பழக்க வழக்கத் தொன்மங்கள் தோன்றுகின்றன.



அரிசி கழுவிய நீரில் கீரை சமைத்தால் சத்து மிகுந்திருக்கும் எனும் பழக்கத்தின் தொடக்கமாய் அன்று, "கழு நீராட் காரட கேனும்"..... நாலடி . 217) என்றவாறு நாலடி தெரிவிக்கிறது. மேலும், வாழைக்காயை வேப்பிலை போட்டுப் பழுக்க வைக்கும் பழக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

"வேம்பின் இலையுட் கனியுடும் வாழைதன்
தீஞ்சுவை". (நாலடி: 244)

புண்ணிற்கு, மஞ்சள் கலந்த காரம் இட்டால் அஃது ஆறும் என்பதை,

"காரத்தின் வெய்ய எந்தோள்" (ஐந்திணை ஐம்பது: 24)
"குலம் காரம் என்றணுகான்" (திமா.நூ:127)

என்றவாறு இவ்விரு நூல்களும் எடுத்தியம்புகின்றன. உறுதிமொழிகளை எழுத்து வடிவில் எழுதிக் கொடுக்கும் பழக்கத்தை,

"அச்சுப் பணிமொழி உண்டேனோ.....
........ என அறியா தேன்........!" (ஐந்திணை எழுபது: 48)

என்று ஐந்திணை எழுபது விளக்குகிறது. எருதுக்கு 'கொள்' தரும்போது அதோடு உப்பு சேர்த்துக் கொடுப்பதால் நோய் எதிர்ப்புத்திறன் அதிகரிக்கும் என்பதை பழமொழி வெளிப்படுத்துகிறது.

"இழிவு அன்று எருது உண்ட உப்பு....!" (பழமொழி: 172)

இன்று நம்மிடையே காணும் பழக்கங்களில் மிகவும் பழமையானது. நிலவைக் காட்டிப் பிள்ளைகளுக்குச் சோறூட்டுதல்.

"பிள்ளைகளை மட்டும் தாயர் போல் அம்பிலி மேல்
ஒள்ளியகாட்டு ஆளர்க்கு அரிது..." (பழமொழி: 264)

எனப் பழமொழி முன்நிறுத்துகின்றது.

இன்றும் கிராமங்களில் பின்பற்றப்படும் வண்டிச்சக்கரத்திற்குக் கற்றாழஞ்சாற்றில் வைக்கோல் கரியைக் குழைத்து மசகு நெய்யாக இடும் பழக்கத்தை அன்றே பழமொழி விளக்கியுள்ளது.

"........ தம் சாகாடேனும்
உயவாமல் சேறாலோ இல்" (பழமொழி: 168)
"உயவு நெய் உட்குளிக்கும் ஆறு". (பழமொழி: 385)

மனிதர் மட்டுமின்றி விலங்குகளின் பழக்க வழக்கத்தையும் நன்கு அறிந்து அதை தம் வாழ்க்கைச் சூழலோடு பொருத்திக் கொண்டவர்கள் அன்றைய தமிழர்கள். வேங்கை இடப்புறம் விழுந்த உணவை உண்ணாது என்பதை,

"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம் வீழ்ந்தது உண்ணாது இரக்கம்" (நாலடி.: 300)

என்று நாலடியார் விளக்கிக் காட்டுகின்றது. நத்தை பின்னாளில் உதவும் பொருட்டு நீரைத் தன்னிடத்தே சேமித்து வைத்துக் கொள்ளும் என்பது பழமொழி வழி தெரிய வருகின்றது.

"........ சேனோக்கி
நத்துநீர் கொண்டதே போன்று" (பழமொழி: 205)

யானையை அடக்க மற்றொரு யானையால் தான் முடியும் என்பதை அறிந்து,

"யானையால் யானையைத் தற்று". (பழ: 29)

என்று பழமொழி தெரிவித்துள்ள செய்தியானது இன்றும் கூட பயன்பாட்டில் மிகுதியாகக் கையாளப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

## முடிவுரை

ஓர் சமூகத்தின் உயிர்ப்பும், உணர்வும் மொழியை மட்டுமின்றி அச்சமூகம் பின்பற்றும் தொன்மங்களாளே என்பதை மேற்கண்ட ஆய்வுவழி அறியலாம். தொன்மங்களின் தன்மையில் ஒரு சமூகமானது முழுவடிவம் பெறும். மொழியை இழந்தாலும், பழக்க வழக்க வாழ்வியல் தொன்மங்களைக் கொண்டு அம்மொழியை எளிதாய் மீட்டெடுக்கலாம், அத்தகைய தன்மை தொன்மங்களுக்கு உண்டு. தமிழர் சமூகம் இன்று முதன்மையாய் முன்னிறுத்தப்படுவதற்கு அன்று முதல் நம்மைத் தொடர்ந்து வரும் தொன்மங்களாளே என்பது மறுக்க முடியாத உண்மை.

வாழ்ந்த வாழ்விற்கும், வாழும் வாழ்விற்கும், இனி வாழப்போகின்ற வாழ்விற்கும் இலக்கணம் வகுப்பது இத்தொன்மங்களே. இதன் வழி பாதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பெறப்பட்ட வாழ்வியல் தொன்மங்கள் மறைந்த ஒரு சமூகத்திற்கும், மலரப்போகும் சமூகத்திற்கும் இடையே இணைப்பாய் இருப்பதை மேற்கண்ட ஆய்வானது முடிவாகக் கண்டுள்ளது.

# பெரியபுராணத்தில் இழையோடும் இல்லற நீதிகள்

முனைவர் ஏ. ஷரீபான்,
தமிழ் விரிவுரையாளர், தொலைதூரக்கல்வி இயக்ககம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்.

◆

## முன்னுரை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மெய்யடியார்களின் உலகியல் வாழ்வினை உள்ளவாறு இவ்வுலகுக்கு எடுத்துக்காட்டியவர் தெய்வப்புலவர் சேக்கிழார் ஆவார். பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் உலகத்தையும், இவ்வுலகத்தில் வாழும் மக்களையும் அம்மக்கள் வாழ்வில் வளம் காணக் கொள்ள வேண்டிய நெறிமுறைகளையும் பல்லாற்றானும் கூறுகிறார். இந்நெறி முறைகளில் இல்லற ஒழுக்கத்தைக் குறிப்பிடத் தக்கதாகக் கொள்ளலாம். இக்கட்டுரை சேக்கிழார் உணர்த்தும் இல்லற நெறி பற்றி மட்டுமே ஆராய முற்படுகிறது.

## இல்லற நீதி

ஈருடல் ஓருயிராய் இணைந்து வாழும் இல்லறத்தில் கற்பு நெறி பிறழாது வாழ்தலும், ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழ்வதும், ஒருவரின் கொள்கைக்காக ஒருவர் ஒருங்கிணைந்து போதலும் ஒருவர் தவறு செய்கின்ற பொழுது அதனைச் சுட்டிக்காட்டித் திருத்த முயலுதலும், ஒருவர் இன்னது செய்வதென்று அறியாது தடுமாறுகின்ற காலத்து ஆலோசனை கூறும் நல் மந்திரியாக வாழ்வதும் ஆகியன இல்லறம் மேற்கொண்டு வாழும் ஒவ்வொரு ஆண் பெண்ணிடத்தும் அமைய வேண்டிய இல்லற தர்மமாகும். இத்தகு இல்லற தர்மத்தை மேற்கொண்டவர்களாய்ப் பெரியபுராண அடியார்கள் விளங்கினர்.

இறைப் பணியில் எத்துணை முன்னேறிச் சென்றாலும் இப்பெருமக்கள் ஏனைய உயிர்களிடத்துக் கொண்டுள்ள அன்புக்கு எல்லையே இல்லை. இதற்கு ஒரு காரணமும் உண்டு. இறைவன் உயிர்களினின்று வேறானவன் என்று இவர்கள் கருதவே இல்லை.